**தலைப்பு 235 – சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.2.2 ஆம் அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட வருமான குறியீட்டுகளுக்குரிய வருமான கணக்குகளும் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

தலைப்பு 235 – சட்ட ஆணைக்குழுத் அலுவல்கள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 30 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால்

பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.6 வரையாக பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | | கணக்கீட்டு உத்தியோகத்தரால் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கிக் கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட்டிருக்காமை. | 2.1.2 |
| | | 2. | பெறுகை நடைமுறையை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.2 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தமது திணைக்களத்தினால் கடைப்பிடிக்கப்படுவதாகவும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள ஏற்பாடுகளை வழங்குவதாகவும் | | இணக்கமின்மை | 2.4 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத்தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. எனவும், | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து பிணை பெற்றுக்கொள்வதில் குறைபாடுகள் | 2.4.1(ஆ) |

**2 பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 செயலாற்றல்**

**2.1.1** திணைக்களத்தின் நோக்கு, நல்லாட்சிக்கான சட்டங்களை திருத்துவது என்பதோடு 2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கைக்கு அமைவாக அதன் முக்கிய நோக்கங்களும் 11 கருமங்களும் குறிப்பிடப்பட்டிருந்தன. எப்படியாயினும் மீளாய்வாண்டில் திணைக்களத்திற்கு அதில் முக்கிய கருமங்களில் சிலவற்றிற்கு மாத்திரம் சம்பந்தப்பட்ட சட்டங்களை திருத்துவதற்கான 8 பிரேரணைகள் முன்வைக்கப்பட்டிருந்ததோடு அதில் இரண்டு பரிந்துரைகள் சட்டவாக்கமாக மாற்றுவதற்காக சட்டவாக்காளருக்கும் ஒரு பரிந்துரை பிரதமர் அலுவலகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டதோடு இன்னும் முடிவின்றி கலந்துரையாடல் மட்டத்தில் உள்ள சட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை ஐந்தாகும்.

**2.1.2 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எதிர்பார்த்துள்ள முக்கிய கருமங்களை செயல்படுத்தும் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான இற்றைப்படுத்தப்பட்ட திணைக்களத்தின் அமைப்பு கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது கடமையாற்றும் பதவியணியினர் தொடர்பான விபரங்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 பெறுகை நடைமுறை**

திணைக்களத்திற்கு ரூபா 245,900 பெறுமதி வாய்ந்த கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.4 வழிகாட்டலுக்கு அமைவாக நிதி விடயம் சார்ந்த முதிர்ந்த அறிவுள்ள ஒருவரை நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 13.80 | 11.54 | 2.26 | 16 |
| | மூலதனம் | 2.50 | 2.18 | 0.32 | 13 |
| | **மொத்தம்** | **16.30** | **13.72** | **2.58** | **16** |
| 2014 | மீண்டெழுபவை | 13.95 | 10.82 | 3.13 | 22 |
| | மூலதனம் | 1.75 | 0.93 | 0.82 | 47 |
| | **மொத்தம்** | **15.70** | **11.75** | **3.95** | **25** |
| 2015 | மீண்டெழுபவை | 15.00 | 10.16 | 4.84 | 32 |
| | மூலதனம் | 2.00 | 1.13 | 0.87 | 43 |
| | **மொத்தம்** | **17.00** | **11.29** | **5.71** | **34** |
| 2016 | மீண்டெழுபவை | 14.63 | 12.14 | 2.49 | 17 |
| | மூலதனம் | 2.03 | 1.43 | 0.60 | 29 |
| | **மொத்தம்** | **16.66** | **13.57** | **3.09** | **19** |
| 2017 | மீண்டெழுபவை | 15.34 | 14.78 | 0.56 | 4 |
| | மூலதனம் | 1.95 | 1.73 | 0.22 | 11 |
| | **மொத்தம்** | **17.29** | **16.51** | **0.78** | **4** |

மீளாய்வாண்டு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயம் ஒன்றிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 100,000 தொகையான நிதியேற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை**

03 செலவு விடயங்களுக்காக மிகை ஒதுக்கங்கள் மேற்கொண்டிருந்த காரணத்தினால் ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அந்த அந்த செலவின விடயங்கள் தொடர்பான தேறிய நிதிஏற்பாட்டின் 07 சதவீதம் முதல் 38 சதவீதம் வரையிலான வீச்சு அளவானதாக இருந்தது.

## 2.4 இணங்காமைகள்

### 2.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | பதிற் கடமைக்கான நியமனங்கள் கொடுக்கப்படும் போது அவ்வாறு நிரந்தர நியமனம் வழங்கும் வரை தற்காலிக செயலாக மாத்திரமே. பதவிக்கான முழு நேர உத்தியோகத்தர் தேவைப்படின் நிரந்தர நியமனம் உடன் வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், செயலாளர் பதவியானது 2015 திசெம்பர் மாதம் முதல் வெற்றிடமாக உள்ளதுடன் அதற்காக நிரந்தர நியமனமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 880 | பணம், காசோலை மற்றும் பொருட்களுக்கு பொறுப்பாக உள்ள பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் 7 பேர் இருப்பினும் நிதிப்பிரமாணத்துக்கு அமைய பிணைப் பணம் வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1653 | திணைக்களத்திற்கு சொந்தமான இரு வாகனங்களின் ஓட்ட குறிப்புக்களில் ஓடப்பட்ட மைல்களின் கணக்கு குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் வாகனத்தைப் பயன்படுத்திய உத்தியோகத்தரின் கையொப்பம் இடப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப்பிரமாணம் 1645 | திணைக்களத்திற்கு சொந்தமான 3 குழாம் வாகனங்களுக்குரிய லொக் புத்தகங்களில் 2017 வருடத்திற்கான பயணங்கள் பற்றிய மாதாந்த பொழிப்புக்கள் முழுமைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை | |
| 2016 திசெமபர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி | வாகனங்கள் தொடர்பான எரிபொருள் குறிப்பு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 உள்ளகக் கணக்காய்வு

கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் தங்களது திணைக்களங்களின நிதிப்பிரமாணம் 128 இல் காட்டப்பட்டுள்ள தமது கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் நிறைவேற்றுவதற்கான தமது திணைக்களங்களில் உள்ளக கணக்காய்வு பிரிவுகளை அமைத்துக் கொள்ளும் படி நிதிப்பிரமாணம் 133 ஆல் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் திணைக்களத்தின் உள்ளக

கணக்காய்வு பணிகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட வேண்டியதாக இருந்தது. நிதிப்பிரமாணம் 134(2) இன் பிரகாரம் திணைக்களத்தின் பணிகளுக்குரிய உள்ளக கணக்காய்வு பணிகள் அமைச்சின் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்தபோதிலும், அக்கணக்காய்வு செயற்பாடுகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 04 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 15 | 06 | 09 |
| (iv) | ஆரம்ப நிலை | 07 | 07 | - |
| | மொத்தம் | 29 | 18 | 11 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியில் முடிவடைகையில் 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் தவறியிருந்தது. சிரேஷ்ட நிலையிலான பதவிகள் 2 (செயலாளர் மற்றும் பிரதி செயலாளர்) மற்றும் இரண்டாம் நிலை பதவிகள் 09 (கணக்கு உதவியாளர் 01, அபிவிருத்தி உத்தியோகத்தர் 2, முகாமைத்துவ உதவியாளர் 05, சுருக்கெழுத்தாளர் பதவி 01) வெற்றிடங்களானவை திணைக்களத்தின் செயலாற்றல் மீது நேரடி தாக்கத்தை ஏற்படுத்துவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.